பத்திரிக்கை செய்தி

உடல் தகுதிச் சான்றிதழ் வழங்க ரூ.900/- லஞ்சம் கேட்டு வாங்கிய மருத்துவர் கைது

புகார்தாரர் திருமதி.ரவீனா, வீரமந்திரி தெரு, அக்கிரெட்டிபுதூர், காட்பாடி, வேலூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது மூன்று குழந்தைகளுக்கு பள்ளியில் சமர்ப்பிக்க வேண்டிய உடற்தகுதி சான்றிதழுக்காக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மருத்துவரை அணுகியுள்ளார். மருத்துவர் வெங்கடலட்சுமி, நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம், பள்ளிகுப்பம், காட்பாடி, வேலூர் மாவட்டம் அவர்கள் உடற்தகுதி சான்றிதழ் வழங்க ஒரு குழந்தைக்கு தலா ரூ.300/- வீதம் மூன்று குழந்தைகளுக்கு ரூ.900/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை வேலூர் பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 23.06.2026, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது மருத்துவர் வெங்கடலட்சுமி, நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் அவர்கள் லஞ்ச பணம் ரூ.900/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.